**தலைப்பு 230 - சட்டவரைபுத் திணைக்களம்**

**……………………………………………..**

## 1. நிதிக்கூற்றுக்கள்

…………………

### 1.1 முணைப்பழியற்ற அபிப்பிராயம்

…………………………………

சட்டவரைபுத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட வரைபுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்டவரைபுத் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முணைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

…………………………………………………….

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றிணை வழங்குவதற்கு போதியளவும் பொறுத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

……………………………………………………………………………………

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

……………………………………………………………………………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும் . நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொறுண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல்ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொறுண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொறுண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோறால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அளப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொறுண்மையான பிரழ்கூற்று ஆபத்தினை இணங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிரழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும்பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

………………………………………………………………………

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட

சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன

## 2. நிதி மீளாய்வு

……………….

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………… | …………………………… | ………………… |
| முன்னைய புரிந்துணர்வு மற்றும் திட்டமிடலின்றி வெளிநாட்டுப் பணச்செலவு விடயத்திற்காக ரூபா 1,000,000 தொகையான நிதிஏற்பாடு உருவாக்கப்பட்டு நிதி ஏற்பாடு முழுவதும் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருக்காததனால் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.திணைக்களத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஏனைய செலவு விடயங்களுக்கு நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | செலவு விடயங்களுக்காக நிதி ஏற்பாட்டினை வழங்கும் போதும் நிதிப் பிரமாணம் 66இன் கீழ் நிதி ஏற்பாட்டினை மாற்றும் போதும்நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் முறையான கவனத்தோடு சிக்கனம் மற்றும் முன்னைய புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

**…………………………..**

3.1 **செயலாற்றல்**

**………………**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………….. | ……… | ………. |

அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றல் பின்வருமாறாகும்.

| சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையினகடமையின் தன்மை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்ட வரைபினை மேற்கொள்வதற்கான மொத்த வேண்டுதல்களின் எண்ணிக்கை (2021 சனவரி 01 இல் முன்கொண்டு வரப்பட்ட மீதியும் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டுதல்களும் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வுரைபு மேற்கொள்ப்பட்டு தொடக்க அல்லது இறுதிவரைபாக ஒப்படைக்கபட்டடு சட்டமா அதிபர் அல்லது ஏனைய அமைச்சு மற்றும் | திணைக்களத்திடமிருந்து அவதானிப்புக்கள் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரைபிடல் முடிவுறுத்தப்படாத மொத்த வேண்டுதல்களின் எண்ணிக்கை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரைபினை மேற்கொள்ளல் முடிவுறுத்தப்படாத வேண்டுதல்களின் எண்ணிக்கை ஆலோசனைகளை எதிர்பார்த்து மிகுதியாகக் காண்ப்படுகின்ற வேண்டுதல்களின் எண்ணிக்கை | பதில் ஏதும் வழங்கப்படவில்லை | திணைக்களத்தின் செயலாற்றலினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
|---|---|---|---|---|---|---|
| ………. | …………… | ………….. | ………… | …………. | | |
| அதிகாரச் சட்டத்தினை வரைபிடுதல் (தொடக்க மற்றும் திருத்திய | 298 | 29 | 202 | 231 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| சட்டம்) | | | | |
| தனியார் பிரதி நிதித்துவ (தோற்றுதல்) சட்டத்தின் வரைபு | 30 | 13 | 13 | 26 |
| துணைச் சட்டத்தை திருத்துதல் | 453 | 48 | 125 | 173 |
| மாகாணசபை நியதிச் சட்டத்தை தயாரித்தல் | 10 | 01 | 09 | 10 |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தமக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள கடமைகளுக்கு புறம்பான விடயங்களின் காரணமாக திணைக்களத்திற்கான சட்ட வரைபுகள் தொடர்பான அவதானிப்புக்களையும் ஆலோசனைகளையும் வெளித்தரப்பினர்களிடமிருந்து எதிர்பார்த்திருக்க வேண்டியிருந்தமை திணைக்கத்தின் செயவாற்றல் தொடர்பாக நேரடியாக தாக்கமளித்திருந்ததுடன் அந்த நிறுவனங்களுக்கிடையே சிறந்த ஒழுங்கிணைப்பை பேணுதல் அத்தியவசியமானது என்பது அவதானிக்கப்பட்டது. | இத்திணைக்களத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்குமிடையே சிறந்த ஒருங்கிணைப்பானது தற்பொழுது பேணப்பட்டு வருகின்றது. இந்நிலைமையானது பிரதானமாக ஆலோசனை வழங்குகின்ற முகவர் நிறுவனங்களினால் தனது கொள்ளையை அடிக்கடி மாற்றுதல் மற்றும் இறுதியாக தேவைப்படுகின்ற ஆலோசனைகளை இத்திணைக்களத்திற்கு வழங்காமையின் காரணமாக இடம் பெறுகின்றது என்பது குறிப்பிடுதல் வேண்டும். | நிறுவனங்களுக்கிடையே சிறந்த ஒருங்கிணைப்பினைப் பேணி திணைக்களத்தின் செயலாற்றலினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்பாடுகள் முடிவுறுத்தப்படாத சட்ட வரைபு கோவைகளுக்கு மத்தியில் 18 ஆண்டுகளிலிருந்து காணப்படும் கோவைகளும் உள்ளன. வேண்டுதல்களை வரைபாக்குவதற்கு அல்லது சீர்படுத்தி முடிவுறுத்துவதற்கு இவ்வாறு நீண்ட காலம் எடுப்பதனால் அதன் எதிர்பார்த்த பெறுபேறுகளின் காலரீதியான முக்கியத்துவம் குறைவடைவதனைப் போல காலரீதியான தேவைப்பாட்டிற்கு பொருத்தமற்று இருப்பதன் காரணமாக அது விளைதிறனற்ற நிலைமைக்கு உள்ளாக்கக்கூடியதாக இருந்தது. | அமைச்சரவையினால் அங்கீகரித்த கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் ஏனைய முகவர் நிலையங்களிடமிருந்து கிடைக்கின்ற வேண்டுதல்கள் சம்பந்தமாக அமைச்சரவை அல்லது முகவர் நிறுங்களினால் மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனத் | நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதகோவைகள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | தெரியப்படுத்தும் வரை அல்லது உரிய அதிகாரச் சட்டத்தினை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கும் வரை அந்த வேண்டுதல்கள் தொடர்பான கோவைகளை மூடுவதற்கு திணைக்களத்திற்கு முடியாதுள்ளது. இது சம்பந்தமாக இத்திணைக்களத்திற்கு எடுக்கக்கூடிய மாற்று நடவடிக்கைகளும் இல்லை. | |

**3.2 பெறுகைகள்**

**……………………**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………….. | ………………………… | ……………….. |
| (அ) | 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரம்“அரசாங்க செலவுகளை மீளாய்வு செய்தல்.” என்ற தலைப்பில்நிதி அசமைச்சினால் சமர்ப்பிக்கபட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2(i) ஆம் பந்தியின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் தற்பொழுது ஆரம்பிக்கப்படாத கொள்வனவுகளை தற்காலிகமாக கைவிடவேண்டும் என தெரியப்படுத்தி இருந்தும் அந்த அமைச்சரவை தீர்மானத்திந்கு முரணாக ரூபா 5,116,054 கூட்டு மொத்தமான பெறுகைகள் மீளாண்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிக்காக புதிய உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் கடமைகள் மற்றும் சேவைகளின் தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தி உரிய அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டன. | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மனைப்பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குரிய செலவு விடயத்தின் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா2,000,000 மாத்திரமாக இருந்ததனால் 3 செலவு விடயங்களில் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 3,201,200 நிதி ஏற்பாடானது நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ஆண்டின் இறுதியில் மாற்றம் செய்யப்பட்டு மேற்கூறிய பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கடந்த ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட சச்சரவான நிலைமையின் காரணமாக பொருட்களின் விலை அதிகளவில் உயர்வடைந்ததனால் வருடாந்த பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடு உரிய அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதாமையினால் பொதுத் திறைசேரியின் அனுமதியுடன் நிதி ஏற்பாடு மற்றம் செய்யப்பட்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெறுகைக்குரிய 1,836,700 கூட்டுமொத்தமான பொருட்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் திணைக்களத்திற்கு கிடைக்காதிருந்தும் அதற்காக கொடுப்பனவு செய்வதற்கு காசோலை எழுதப்பட்டிருந்தது. மேலும் அப்பொருட்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் பொருள் இருப்பு பதிவேட்டிலும் உள்ளடக்கபட்டிருந்தது. | உரிய பொருட்கள் திணைக்களத்திற்கு உறுதியாக வழங்கப்படுமென வழங்குனர்கள் உறுதிப்படுத்தி இருந்ததனால் அப் பொருட்கள் பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு காசோலை எழுதப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 135 மற்றும் 136 தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியதுடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆண்டின் இறுதியில் பணத்தை நிறுத்தி வைக்காதிருத்தல் வேண்டும். |
| (ஈ) | கடந்த ஆண்டின் இறுதியின் போதும் மேற்கூறியவாறு பொருட்களைப் ெற்றுக்கொள்வதற்கு முன்னர் ரூபா 2,189,612மொத்த தொகையான காசோலைகள் எழுதி போட்டோ பிரதி இயந்திரம், 18 ups கள், 10 கணனி இயந்திரங்கள் என்பன ஆண்டின் இறுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு போட்டோ பிரதி இயந்திரங்கள் நூல் நிலையத்தில் மற்றும் இரண்டாம் மாடியின் போட்டோ பிரதி செய்யும் அறையில் பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன. 2020-09-09 ஆந் திகதி வேண்டிக் கெள்ளப்பட்ட 15 கணனி இயந்திரங்களில் 10 கணனி இயந்திரங்கள் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 05 இயந்திரங்கள் மீளாய்வாண்டில் கொள்வனவு | நிதிப்பிரமாணம் 135 மற்றும் 136 தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியதுடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆண்டின் இறுதியில் பணத்தை நிறுத்தி வைக்காதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யபட்டுள்ள 03 கணனி இயந்திரங்களும் 05 லெப்டொப் இயந்திரங்களும் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கானவையாகும். களஞ்சியத்திலுள்ள பழுதடைந்த 16 ups இயந்திரங்கள் மற்றும் புதிய 18 கணனி இயந்திரங்களுக்காக 34 ups இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

………………………………………

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………. | ……………………………………… | ………….. |
| நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் நிறுவனத்தின் வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் தமது பொறுப்பில் உள்ள ஒவ்வொரு வாகனத்திற்காகவும் தமது அலுவலகத்தின் 267 ஆவது பொதுப்படிவத்தின் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்புப் புத்தகத்தை பேணி அதில் எழுதவேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் 08 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் பதிவு செய்யபட்டடிருக்காததுடன் பயனங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுஅவதானிப்புக்களுடன் இனங்குகிறேன் எதிர்காலத்தில் பயணங்கள் தொடர்பானமாதாந்தப்பொழிப்பு ஒவ்வொரு மாத இறுதியின் போதும் வாகன சம்பவக் குறிப்புப் புத்தகத்தின் பக்கஇலக்கம் 58 இல் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கிறேன்.<br>வாகன விபத்துக்கள் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள படிவத்தின பிரகாரம் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 1645 (அ) மற்றும் 1646 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவப் பலவீனம்

……………………………..

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………. | ……………………………………… | ………….. |
| வீடுகளைத் திருத்தம் செய்வதற்காக இடர்கடன்களை வழங்கும் போது கடன் கோரிக்கையாளர்களின் பெயரில் ஒரு வீடு உள்ளது என்பதற்கான ஒரு சான்றிதழும் வீட்டினைத் திருத்தம் செய்யும் செலவு மதிப்பீடும் பெற்றுக்கொள்ளப்படாது 04 சந்தர்ப்பங்களின் போது வீடுகளைத் திருத்தம் செய்வதற்காக ரூபா 812,556 மொத்தத் தொகையான இடர்கடன் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் இதற்குப் பின்னர் உத்தியோகத்தர்களுக்கு அது சம்பந்தமாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய தேவைப் பாட்டினைப் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

…………………………………………………………………………………….

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………. | ……………………………………… | ………….. |
| 2030 நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு சட்ட வரைபு திணைக்களத்தினால் தனது நோக்கெல்லையின் பிரகாரம் நிலைறோன அபிவிருத்திக் குறிக்கோள்கள் / இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையை அமுல்ப்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2030 நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டவாறு தனது நோக்கெல்லையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்/இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. நல்லாட்சி

…………..

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

……………………………….

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ………………………………. | ……………………………………… | ………….. |
| 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம்ஒரு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினை தோற்றுவிகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியும் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின்போது உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இத்திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இல்லாததுடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின்மூலம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவினைத் தேற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனித வளங்கள் முகாமைத்துவம்

……………………………………..

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ………………………………. | ……………………………………… | ………….. |
| அ | மீளாய்வாண்டின் திசெம்பர் 22 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியனியின் வெற்றிடங்கள் 56 ஆகும். அவை அங்கீகரித்த பதவியணியில் 38 சதவீதமாகும். | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகிறேன். | துரிதமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | ¡ 2021 பெப்ரவரி 21 இல் உள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட சேவைக்காலத்தை பூரணப்படுத்தி இருந்த 14 உதவி சட்ட வரைவாளர்கள் | • தற்பொழுது உதவி சட்ட வரைவாளர் பதவியில் சேவையாற்றுகின்ற 14 உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட உதவி சட்ட | |

| | | |
|---|---|---|
| | இருந்ததனால் 08 சிரேஷ்ட உதவி சட்ட வரைவாளர்களின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்தல் இந்த அறிக்கைத் திகதிவரையும் இடம் பெற்றிருக்கவிலை. | வரைவாளர் பதவிக்கு பதவியுயர்த்துவதற்கு தகைமை பெற்றுள்ளதனால் அங்கீகரித்த சிரேஷ்ட சட்ட வரைபாளர் பதவியின் எண்ணிக்கையை 08 இலிருந்து 14 வரை அதிகரித்து தருமாறு வேண்டிக்கொள்ளப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| ii | மொழிபெயர்ப்பாளர் பதவிக்காக 07 பட்டதாரிகள் 2021 திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 01 ஆண்டு காலத்திற்கும் நூலகர் 2021 நவம்பர் 22 ஆந் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 14 ஆந் திகதி வரையும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அவ்வாறே இரண்டு பயிலுனர்கள் 04/2017 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் 06 மாதங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | • சிரேஷ்ட மட்டத்திலுள்ள பிரதி சட்ட வரைவாளர் பதவியில் காணப்படுகின்ற 02 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகமை பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இருக்கவில்லை. |
| iii | சட்டவரைபினை குறிக்கோளாகக் கொண்ட சட்டவரைபு திணைக்களத்தின் செயலாற்றலுக்காக நேரடிகாக பங்களிப்பினை வழங்குகின்ற சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டத்திலுள்ள 12 பதவிகளில் 07 பதவிகளுக்காக 35 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவை அங்கீகரித்த பதவியணியில் 49 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. | • உதவி சட்ட வரைவாளர் பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு உடன் நடவடிக்கை எடுக்கட்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) அரசாங்கத் துறையில் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் என்ற தலைப்பில் 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01,02 மற்றும் சுற்றறிக்கையின் 6.1 மற்றும் 6.5 ஆம் பந்திகளின் பிரகாரம் நிறைவேற்றப்படவேண்டிய தேவைப்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தில் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | • 2022 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட மனிதவளங்கள் அபிவிருத்தித் திட்டமானது 2022-01-18 ஆம் திகதி நிதி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றிக்கையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |